<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>

அசல் வழக்கு எண்.345/2022

இன்று 2026 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 13 ம் நாள் இன்று இந்த பி.வா.சா.1 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : துரைசாமி | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : சென்னியப்பன் | கிராமம் | : முத்தண்ணம்பாளையம் |
| வயது | : 60 | தாலூக்கா | : திருப்பூர் தெற்கு |
| நாள் | : 13-08-2026 | மாவட்டம் | : திருப்பூர் |

<u>சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1. வழக்கு சொத்தானது 25.04.1967 ம் தேதியில் கிரய ஆவணத்தின் படி 1 ம் வாதியின் தாயார் முத்தம்மாள் கிரயம் வாங்கினார் என்றால் சரிதான். அவர் கிரயம் வாங்கிய மொத்த பூமியின் விஸதிரணம் 5.48 ஏக்கர் என்றால் சரிதான். அதே தேதியில் எனது தகப்பனாரும் மேற்படி காலையில் 63 செண்ட் கிரயம் வாங்கினார் என்றால் சரிதான். கிரயம் வாங்கிய சமயத்தில் இரண்டு கிரய பத்திரலும் செக்குபந்தி கண்டு தான் கிரயம் வாங்கினோம் என்றால் ஆமாம்.

2. முத்தம்மாள் வாங்கிய சொத்தை 19.06.2003 ல் அவருடைய மகள் காந்திமதிக்கு செட்டில்மண்ட் எழுதிவிட்டார் என்று சொன்னால் எனக்கு தெரியாது. வாதிகள் எதன் அடிப்படையில் வழக்கு நடத்தி வருகிறார்கள் என்றால் தெரியும். 2011 ல் 1 ம் வாதி 2 ம் வாதிக்கு செட்டில்மண்ட் எழுதி கொடுத்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. இந்த தாவா சொத்துக்குண்டான குழாய் வரி ரசீது, சொத்து வரி ரசீது வாதி பெயரில் உள்ளது என தெரியுமா என்றால் தெரியாது.

3. எனது தகப்பனார் வாங்கிய சொத்தில் நானும் மற்ற பிரதிவாதிகளும் அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரிதான். தாவா சொத்தில் சுமார் 250 தென்னை மரங்கள் வைத்து வாதிகள் விவசாயம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் ஆமாம். தாவா சொத்தில் சுமார் 30 வருடங்களுக்கு மேலாக வாதிகள் விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் ஆமாம். நானும் எனக்கு பாத்தியபட்ட சொத்தில் விவசாயம்

செய்துவருகிறேனா என்றால் ஆமாம். வாதிகள் தாவா சொத்தில் அவர்களும் குடியிருந்து வருகிறார்கள் வாடகைக்கும் குடியிருந்து வருகிறார்கள் என்று சொன்னால் ஆமாம். தாவா சொத்தில் வாதிகள் பாத்ரூம் கட்டி உள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். ஆனால் தென்மேற்கு மூளையில் எனக்கு பாத்தியம் உள்ளது. வழக்கிற்காக தென்மேற்கு மூளையில் பாத்தியம் உள்ளது என்று பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு எந்த பாத்தியமும் இல்லை.

4. மேற்படி பாத்ரூம் கட்டி சுமார் 20 வருடங்கள் மேல் ஆனது என்று சொன்னால் சரிதான். தற்போது வரை வாதிகள் அனுபவத்தில் தான் தாவா சொத்து இருந்து வருகிறது என்றால் ஆமாம். பாத்ரூம் கட்டும் போது எந்தவித ஆட்சேபணையும் செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் வேறு இடத்தில் இருந்ததால் ஆட்சேபணை செய்யவில்லை. பாத்ரும் கட்டியது சம்பந்தமாக சட்ட ரீதியாக நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. வாதிகள் தான் சட்டபடியான அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

5. வாதி இருக்க கூடிய இடம் வாதிக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. அதனால் நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் அந்த பகுதியை கிரயம் கேட்டு பிரச்சனை செய்தோம் என்றால் சரியல்ல. வாதி கோரியபடி தாவா அனுமதிக்க வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA
Digitally signed by VANITHA
Date: 2026.08.13 16:35:45 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.